அகரம் பேரூராட்சி முழுவதும்

காவிரி கூட்டுக்குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன்!

நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஜூலை 19- அகரம் பேரூராட்சி முழுவதும் காவிரி கூட்டுக் குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன் என்று அகரம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியமல்லணம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 2026 சட்டமன்ற தொகுதியில் தனக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கிராமம் கிராமமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறார். அகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட கோட்டூர் ஆவாரம்பட்டியில் தனது நன்றி தெரிவிக்கும் பிரச்சாரத்தை தொடங்கிய ஐ.பெரியசாமி அவர்கள் பாப்பணம்பட்டி, பெரிய மல்லணம்பட்டி, கருங்கல்பட்டி, ரெங்கப்பனூர், உலகம்பட்;டி, சுக்காம்பட்டி, லெட்சுமணம்பட்டி, காக்காதோப்பு ஆகிய கிராமங்களுக்கு சென்று பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

பெரிய மல்லணம்பட்டிக்கு வந்த முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் ஆரத்தி எடுத்து அதிர்வேட்டு முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் பொது மக்கள் மத்தியில் பேசிய ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை 37 ஆண்டுகளாக தொகுதி மக்களோடு மக்களாக இணைந்து களப்பணி ஆற்றிவருகிறேன். 15 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் தொகுதி மக்களுக் கான நலத்திட்டப் பணிகளை நான் என்றும் குறை வைத்தது கிடையாது. அதைப்போலத்தான் ஆத்தூர் தொகுதி மக்களும் என் மீது அளவில்லாத அன்பு கொண்டு என்னை தொடர்ந்து வெற்றிபெற வைத்துள்ளார்கள்.

அகரம் மற்றும் தாடிக்கொம்பு பேரூராட்சிக்கு எரியோடு பகுதியிலிருந்து காவிரி கூட்டுக்குடிநீர் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதுடன் அகரம் பேரூராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு சாலை வசதி தடையின்றி குடி தண்ணீர் வசதி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நன்றி தெரிவிக்கும் பிரச்சார கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், தாடிக்கொம்பு பேரூராட்சி மன்றத் தலைவர் கவிதா சின்னத்தம்பி, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர்கள் நாகப்பன் ஜெயபால், மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், திண்டு;க்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நாள்!

தயாநிதி மாறன் எம்.பி. வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 19 –

நேற்று 'தமிழ்நாடு நாளை' யொட்டி தயாநிதி மாறன் எம்.பி. விடுத்த வலைதளப் பதிவு வருமாறு:

தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் 'மெட்ராஸ் மாகாணம்' என்ற பெயரை 'தமிழ்நாடு' என்று மாற்றுவதற்கு அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்கிற தீர்மானத்தை அப்போதைய தமிழ் நாடு முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தினம் இன்று!

வாழ்க தமிழ்நாடு!

இவ்வாறு அப்பதிவில் தயாநிதி மாறன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி – திண்டுக்கல் அரசு போக்குவரத்துக் கழகத்தில்

பணி மூப்பு அடிப்படையில் - சுழற்சி முறை பணி வழங்க வேண்டும்!

அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. கோரிக்கை!

திண்டுக்கல். ஜூலை.19- திண்டுக்கல் அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, பொதுச்செயலாளர் பொன்.செந்தில் தலைமை வகித்தார். பிரச்சார செயலாளர் முத்து ராமன், மத்திய சங்க செயலாளர்கள் ஜெகன் பாலு, முருகப்பெருமாள் முன்னிலை வகித்தனர்.

இதில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டலத்தில், திண்டுக்கல், தேனி மாவட்டம் 2 மாவட்டங்கள் உள்ளது. சுமார் 700க்கும் மேற்பட்ட பஸ்கள் இயங்கு கிறது.

திண்டுக்கல்லில் இருந்து குமுளி, பழனி, மதுரை, கரூர், சேலம், ஈரோடு, திருச்சி உட்பட பல மாவட்டங்களுக்கு பஸ்கள் இயக்கப்படுகிறது.

இந்நிலையில், திண்டுக்கல் மண்டலத்தில் போதுமான அளவில் டிரைவர்கள், கண்டக்டர் இல்லாததால், நீண்ட நாட்களாக ஒரே ரூட்டில் தொடர்ந்து டிரைவரும் நடத்துனரும் பலர் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் அதிகாரிகள் சுழற்சி முறையில் பணி என்ற பெயரில் ஓட்டுநர் நடத்துனரை சில நாட்களாக பணி மாற்றம் செய்து வருகின்றனர்.

இது ஓட்டுநர் நடத்துனர் இடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. ஓய்வு பெறுவதற்கு சில மாதங்கள் உள்ள நிலையில் பல தொழிலாளர்கள் உள்ளனர். நகரப் பஸ்களில் பணி புரிந்து வரும் டிரைவர், கண்டக்டர்களை நீண்ட தூரம் செல்லும் மொபசல் பஸ்களில் பணி புரிய நிர்பந்தப்படுத்துகின்றனர்.

வயது மூப்பின் காரணமாக பல்வேறு நோய்களை கொண்டுள்ள சிலர், எங்களால் எப்படி இரவு பகலாக செல்லும் நீண்ட தூர பஸ்களை பாதுகாப்பாக இயக்க முடியும். சுழற்சி முறை பேஜ் என்று சொல்லி டிரைவர் கண்டக்டர்களுக்கு ஆறு மாதத்துக்கு ஒரு பஸ் வீதம் பணிபுரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

அதிகாரிகள் செய்யும் இந்த நடவடிக்கையால், டிரைவர் கண்டக்டர்கள் நிர்வாகத்தின் மீது அதிருப்தியில் உள்ளனர். எனவே போக்குவரத்து நிர்வாகம் கடந்த காலங்களில் செயல்பட்ட முறையிலேயே செயல்பட வேண்டும். சுழற்சி முறை பேஜ் முறையை கைவிட வேண்டும். பழைய முறையிலேயே தொடர வேண்டும். அப்போது தான் போக்குவரத்து தொழிலாளர்கள் கவனமாக மன உளைச்சல் இல்லாமல் பணியாற்ற முடியும். என தெரிவித்தனர். மேலும் இந்த மன உளைச்சலில் கடந்த 10 தினங்களுக்குள் இரண்டு போக்குவரத்து ஊழியர்கள் மரணம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றக் சங்க பொதுச் செயலாளர் பொன்.செந்தில் தெரிவித்த தாவது:

உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் வழங்கப்பட்ட உத்தரவுப்படி பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறை பணி வழங்காமல், மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் மற்றும் திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தன்னிச்சையாக முடிவெடுத்து, கிலோமீட்டர் அடிப்படையில் சுழற்சி பணி உருவாக்கி, அதில் தான் பணி புரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர். இதில் மலை வழித் தடங்களில் இதுவரை பணிபுரியாத மூத்த ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களை நியமித்து கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் பெரும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நகரப் பஸ்களில் பணிபுரிந்த டிரைவர்களை நெடுந்தூர பஸ்களில் பணிபுரிய நிர்பந்தப்படுத்துகின்றனர். இதனால் டிரைவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இது குறித்து தொழிற்சங்கங்கள் நீதிமன்ற ஆணைப்படி பணி வழங்க வேண்டும் என்று கூறியும், அதனை பொருட்படுத்தாமல் மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் மற்றும் திண்டுக்கல் மண்டல பொது மேலாளர், தங்கள் நினைத்ததை சாதித்தே ஆக வேண்டும் என்று, கிலோமீட்டர் அடிப்படையில் தான் பணி புரிய வேண்டும் என்று கூறி வருகின்றனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி பல தொழிலாளர்கள் மருத்துவ விடுப்பில் செல்கின்றனர். ஆகையால் அரசு உடனடியாக தலையிட்டு பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறை பணி வழங்க வேண்டும், எனத் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்டம்

குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்!

முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

பெரம்பலூர்,ஜூலை,19– பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்த முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர்.எம்.எல்.ஏ. செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, அவர் குறிப்பிட்டதாவது:–

விஜய் தொடர்ச்சியாக ரெண்டே பேருக்கு தான் போட்டி ஒன்று தி.மு.க இன்னொன்று த.வெ.க.

என சொல்லி வருவதையே, திருமாவளவன் சொல்லியுள்ளார் என நினைக்கிறேன். இதன் மூலமாக அ.தி.மு.க.வை காலி செய்து விடலாம் என்கின்ற எண்ணத்தில் த.வெ.க.வும், விஜயும் இருக்கிறார்கள். ஆனால் பா.ஜ.க. இன்னொரு கோணத்தில் இயங்குகிறது. இதையெல்லாம் சூசகமாகத்தான் திருமாவளவன் பேட்டியாக சொல்லி உள்ளார் என நான் நினைக்கிறேன்,

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளை அழித்தொழிக்க பா.ஜ.க. முயல்கிறது என திருமாவளவன் தெரிவித்துள்ளது குறித்த கேள்விக்கு...

திருமாவளவன் ஜனாதிபதி ஆட்சி வந்து விடக்கூடாது சட்டமன்றம் கலைக்கப்பட்டு விடக்கூடாது எனும் கூழலில் ஆதரவு அளிப்பதாக ஏற்கனவே சொல்லியுள்ளார், இந்த கூழலில் இன்று நடக்கின்ற நடப்புகள் அவரை இந்த செய்திகளை சொல்ல வைத்து இருக்கிறது அவர் எப்போதும் அரசியலை கூர்ந்து பார்த்து பதில் சொல்லக்கூடியவர். எனவே அவர் அரசியலை கூர்ந்து பார்த்து இந்த கருத்துக்களை தெரிவித்ததாக தான் நான் நினைக்கிறேன்.

விஜயின் த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்து இரு விஷயங்கள் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

விடிந்தால் இன்று என்ன நடக்குமோ எனும் பதட்டமாக இருக்கும், மற்றொன்று தினமும் இவர்களே பரபரப்பை கிளப்புகின்ற வகையில் ஏதாவது செய்து கொண்டுள்ளனர். ஆட்சியும் இவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் குதிரைபேரத்தில் ஈடுபடுவது தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செய்தியாக வருகிறது.

பாலியல் குற்றங்கள், லாக்கப் மரணங்கள் காவல்துறை அத்துமீறல்கள் என பல செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது ஆனால் ஒரு செய்திக்கும் முதலமைச்சர் வாய் திறப்பதே இல்லை.

கடந்த காலத்தில் எந்த சம்பவம் நடந்தாலும் அந்த சம்பவத்திற்கு தனது கருத்தை வெளிப்படுத்துவார், லாக்கப் மரணங்கள் நடந்தால் அந்த குடும்பத்தி னரிடம் மன்னிப்பு கேட்டு வருத்தம் கேட்ட செய்திகளெல்லாம் உண்டு. அதை அன்று விஜய் கிண்டல் செய்தார். சாரி சொல்லாதீங்க எங்களுக்கு நீதி தான் வேண்டும் என்றார்.

ஆனால் இன்று அந்த சாரி சொல்லக்கூட இவர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்த தயாராக இல்லை. அதேபோன்று ஒன்றிய அரசின் பல்வேறு நெருக்கடிகள் குறித்தும் வாய் திறக்க இவர் தயாராக இல்லை.

அவர் நினைக்கின்ற போது மேடை ஏறி தனது கருத்தை சொல்லிவிட்டு போய்விடலாம் அதை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார் என அவர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்.

அவரது ரசிகர்களும், ரசிக மனப்பான்மையும் வாக்களித்தவர்கள் தான் அவர் சொல்லும் செய்திக்காக காத்திருக்கின்றனர், மற்ற தமிழ்நாட்டு மக்களை பொறுத்த அளவு ஒரு முதலமைச்சராக தன்னுடைய கடமையை அவர் ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இப்படி அவர் எதற்கும் வாய் திறக்காமல் மௌனமாக இருப்பது மக்களை அவமானப்படுத்துவது போன்றது என்பதை அவர் என்று தான் உணரப்போகிறாரோ? என்பது தான் இன்று கேள்விக்குறியாக?உள்ளது.

த.வெ.க. கூட்டணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய எங்களுடைய பழைய தோழர்களுக்கு, த.வெ.க.வின் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், அதே சமயத்தில் எடுத்த முடிவுகளில் இருந்து பின்வாங்கவும் முடியாமல் மன உளைச்சலில் உள்ளனர். அதைத்தான் அவர்களது சமீபத்திய பேட்டிகள் காட்டுகிறது.

குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வீரபாண்டியன் மிகத் தெளிவாக பேசக்கூடிய கொள்கைவாதி. ஆனால், ஒவ்வொரு நாளும் காலை, மாலை என அவர் அளிக்கும் பேட்டியே வித்தியாசமாக உள்ளதை எல்லோரும் உணர்ந்து இருக்கின்றனர். காலம் தான் இதற்கெல்லாம் முடிவு சொல்லும்.

தி.மு.க. கூட்டணியில் அவர்கள் இருந்தபோது அவர்கள் நினைத்த நேரத்தில் கூட்டணியின் தலைவரான மு.க.ஸ்டாலினை சந்தித்தனர். பல்வேறு கருத்து களை விவாதிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது.

ஆனால் த.வெ.க. தலைவரை அவர்கள் சந்திப்பதே, இன்று பெரிய செய்தியாக வரும் கூழல் மாறி இருக்கிறது. அந்த இடைவெளி என்பது கூட்டணி யில் அரவணைப்பு குறைந்திருக்கிறது என்பதுதான் இப்போதைய கூழல்.

அ.தி.மு.க.வினர் இப்போது தூக்கத்தில் இருந்து எழ வேண்டும். தேர்தல் பிரச்சாரத்தின் போது கொடி பறக்கிறது பார், விரைவில் மிகப்பெரிய கட்சிக்காக காத்திருக்கிறேன் என்றெல்லாம் எடப்பாடி பழனிச்சாமி தொடர்ச்சியாக சொல்லி வந்தார். அதன் காரணமாகவே அதிமுக தொண்டர்கள் நிலை குலைந்து போயினர். அதுதான் சென்னையில் 4 மாவட்ட தோல்விக்கு காரணம். இனியாவது அதிமுக விழித்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் தான் அ.தி.மு.க. என ஆதவ் அர்ஜுனா தொடர்ச்சியாக சொல்லி வருகிறார். அதை நிர்மல் குமார் வழிமொழிகிறார். அ.தி.மு.க.வின் அடிமட்ட தொண்டர்கள் இதை துளியும் விரும்ப வில்லை.

அ.தி.மு.க. தலைமை இன்று ஏற்படுத்தியிருக்கும் தோல்வி, த.வெ.க. வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது. இதனால் அ.தி.மு.க. தொண்டர்கள் மிகுந்த மன வருத்தத்தில் உள்ளனர். எனது குன்னம் தொகுதி நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் அதிமுக தொண்டர்கள் அதைத்தான் என்னிடம் சொல்லினர்.

தி.மு.க.–அ.தி.மு.க. கூட்டணி என மற்றவர்கள் பரப்பும் கருத்துக்கு, கதைகளுக்கு திமுக பதில் சொல்ல வேண்டும் என எதிர்பார்ப்பது, ஒரு நேரட்டிவ் செட்டிங்தான். அந்த பிரச்சினையே இல்லை. குறிப்பாக த.வெ.க. வியூக வகுப்பாளர்கள், ஆதவ் அர்ஜுனாவின் கூட்டம் தான் இந்த செய்தியை பரப்புகிறது.

இல்லாத செய்தியை பரப்புகிற ஒரு கோயபல்ஸ் ஹிட்லருடைய காலம் போல் பிரச்சார பயணம் தான் இன்றைக்கு விஜய் ஆட்சி நடக்கிறது விஜய் கரூர் செல்வதை ஒரு காலமும் தி.மு.க. தவிர்ப்பதற்கு நீதிமன்றம் செல்லவில்லை ஆனால் அன்று வந்த தலைப்பு செய்திகள் முழுவதும் விஜயன் ரூட் மாபியா மூலமாக விஜய் கரூர் செல்வதை தடுப்பதற்காக திமுக மனு போட்டதாக செய்தியை பரப்பினர்.

தி.மு.க. தாக்கல் செய்த மனு நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படி எந்த வார்த்தையும் அதில் இல்லை. எனவே தொடர்ந்து அவர்கள் செய்வதெல்லாம் தலைப்பு செய்திகளை கொடுத்து அதன் மூலமாக மக்களை திசை திருப்புகலாம் என்கின்ற எண்ணத்தில் திமுக அதிமுக கூட்டணி கொடுத்த செய்தியும்.

தி.மு.க. முழு செயல்பாட்டில் களத்தில் உள்ளது. ஆறு மாத காலத்திற்கு இந்த அரசின் சில விஷயங்களை விமர்சிக்க வேண்டாம் என எங்கள் தலைவர் சொல்லியுள்ளார். ஆனால் மக்கள் பொறுத்து இருக்க வில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

கன்னியாகுமரியில் சபரிவர்மன் கஸ்டடி மரணம் அடைந்திருக்கிறார் அங்கு மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். பழனியில் அறநிலைத்துறைக்கு சொந்தமான இடத்தை தனியாருக்கு விற்று உள்ளது நீதிமன்றமே தலையிட்டு கண்டனம் தெரிவித்துள்ளது. அதையும் மூடி மறுத்து திசை திருப்பின்ற விஷயமாக அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லிக் கொண்டுள்ளனர்.

மக்கள் களத்திற்கு வந்துவிட்டனர் தி.மு.க. எதிர்காலத்தில் இந்த அரசை முழுமையாக வெட்ட வெளிச்சப் படுத்தி தி.மு.க.வின் செயல்பாடுகள் தொடரும்.

தி.மு.க. – அ.தி.மு.க. செய்த திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்ள தாவீகா முயற்சிக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக கூட தி.மு.க. ஆட்சியில் எம்ஆர்பி மூலமாக தேர்வு நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி ஆணை வழங்கியுள்ளனர். ஆனால் இந்த 60 நாட்களில் ஏதோ இவர்கள் அறிவிப்பு கொடுத்து தேர்வு நடத்தி அவர்களுக்கு பணி வழங்கியது போல ஒரு ஷோ நடத்துகின்றனர்.

தி.மு.க. செய்த நல்லவற்றையெல்லாம் தாங்கள் செய்தது போல சொல்லுகின்ற அதே வேளையில் தி.மு.க. மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அழித்து விடலாம் என நினைக்கின்றனர். மக்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும். விடியல் பயணத்திட்டம், நான் முதல்வன் திட்டத்தை யார் கொண்டு வந்தது என அவர்கள் அறிவார்கள். இவர்கள் பெயரை மாற்றலாம் மக்கள் மறக்க மாட்டர்.

பா.ஜ.க. எல்லா மாநிலங்களிலும் தங்களது ஆட்சி வரவேண்டும் என விரும்புகின்றனர் அப்படி விரும்புகின்ற போது சில மாநிலங்களில் நேரடியாக அவர்களால் களத்திற்கு சென்று செயல்பட முடியாது அதனால் வேறு சக்திகளை இயக்கி உள்ளே நுழைவது வழக்கம் அப்படி தான் அண்ணாமலையை பாஜகவில் இருந்து வெளியே வர வைத்து தற்போது கட்சி துவங்கியுள்ளனர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.ராஜேந்திரன், வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி.மதியழகன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம். கே.கரிகாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அரசு வழக்கறிஞர் பணிக்கு ரூ.30 லட்சம் வரை லஞ்சம்!

த.வெ.க.வின் ஊழலை அம்பலப்படுத்திய பெண் நிர்வாகி கட்சியிலிருந்து நீக்கம்!

த.வெ.க.வின் முகமூடி கிழியத் தொடங்கியது!

சென்னை, ஜூலை 19 - அரசு வழக்கறிஞர் பணிக்கு லஞ்சம் வாங்குவதாக, த.வெ.க. அரசின் ஊழலை அம்பலப்படுத்திய பெண் வழக்கறிஞர், அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தை முறையாக மேற்கொள்ளாமல், அமைச்சர்கள் 30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெற்று நியமிப்பதாக, விழுப்புரத்தைச் சேர்ந்த த.வெ.க. கட்சி நிர்வாகியும், பெண் வழக்கறிஞருமான ஞானசவுந்தரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

த.வெ.க. அமைச்சர்கள் அரசுப் பணிக்கு லஞ்சம் வாங்குவதாக அம்பலப்படுத்தியதைப் பொறுத்துக் கொள்ள முடியாத விஜய் கட்சி, ஞானசவுந்தரியை உடனடியாக கட்சியிலிருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளது பேசுபொருளாகியுள்ளது.

உட்கட்சியில் எழுந்த புகாரை விசாரித்து வெளிப்படைத் தன்மையை நிரூபிப்பதற்கு பதிலாக, புகார் அளித்த பெண் நிர்வாகியை கட்சியிலிருந்துநீக்கியிருப்பதன் மூலம், த.வெ.க.வின் முகமூடி கிழியத் தொடங்கியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வேலூர் மாவட்டம், காட்பாடி கழிஞ்சூர் நகரத்தைச் சேர்ந்த தலைமைகழக பேச்சாளர் மாவட்ட பிரதிநிதி கே.ஏ.கண்ணன் அவர்கள் இயற்கை எய்தினார். அவருக்குவேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். உடன் குடியாத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மாநில,மாவட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஆகியோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் 221வது நினைவு தினத்தை முன்னிட்டு சூலூரில் அமைந்துள்ள கோவை தெற்கு மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் சீரபாளையம் செந்தில் ஏற்பாட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் கிணத்துக்கடவு பேரூராட்சி தலைவர் கதிர்வேல், பேரூர் கழக செயலாளர்கள் விஸ்வநாதன் (கண்ணம்பாளையம்), கவுதமன் (சூலூர்), மாவட்ட மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயலலிதா, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவின் பேரவை அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சாப்ரா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் கே.பி.சண்முகம், மணிமோகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.